
# Jaffna University Christian Students Centre

THIRUNELVELY — JAFFNA



(PLAN OF THE CENTRE WHEN COMPLETED)

## DEDICATION AND OPENING

OF

## ST. THOMAS CHURCH

MONDAY 19TH JANUARY 1987

4-00 P. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Our Gratitude*

We are pleased to acknowledge with gratitude the generous donation made by the World Council of Churches to make this Students Christian Centre possible. Despite the unsettled situation in this part of the country the W. C. C. had confidence that the Christian community can go ahead with its ministry with faith and courage. The community therefore acknowledges its gratitude to the World Council for this generous help. We trust the work at this Centre will be carried on with the same ecumenical vision and spirit as that of the World Council itself.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Message*

We are all delighted at the prospect of the Christian Students and Staff at the Jaffna University having a Centre of their own for their worship, fellowship, study and service activities. Despite the troubles and turmoils which we are facing in this part of the country, we are grateful to God that it was possible to complete at least a part of this project. "Life is encounter". A Centre which can be a focus for the encounter between God and people and students and teachers with one another has a great potential for enhancing and enriching the life of all those who come to meet there. It is our prayer and hope that this Christian Students Centre will be a place where visions are seen, new horizons opened and young people learn to commit themselves fully to the service of God and the community in which they are placed. We pray for God's blessings on the Jaffna University Christian Students Centre that it may be a spiritual power house for all who gather there.

It is significant that the place of worship is named after St. Thomas, one of our Lord's disciples and the Apostle to India. St. Thomas is remembered as the one who came to faith through his doubts. He therefore has been an inspiration and guide to students throughout the ages who have learned to wrestle with their doubts and come to faith. St. Thomas also became a martyr and lies buried at Mylapore in Madras on Tamil soil. To Tamil students therefore the life and ministry of this martyr apostle can be a challenge to their commitments for the service of God and of their people.

**D. J. Ambalavanar**
Bishop in Jaffna

Bishop's House,
Vaddukoddai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

The ministry to the youth has always been an important one in the Church. In our present context the urgent need for it connot be adequately emphasized. Hence we rejoice at the opening and dedication of the Christian Students' centre at the Jaffna University.

Vatican Council II in its Message to the Youth, issued at the closing session on 7th December 1965, has encouraged the youth in the following words: "... it is in the name of this God and His Son Jesus, that we exhort you to open your hearts to the dimensions of the world, to heed the appeal of your brothers, to place your youthful energies at their service. Fight against all egoism. Refuse to give free course to the instincts of violence and hatred, which beget wars and all their train of miseries. Be generous, pure, respectful and sincere and build in enthusiasm a better world than your elders had. The Church looks to you with confidence and with love".

May this new Christian Students' Centre encourage our youth in the University to face such a challenge in our Society today.

*B. Deogupillai*
*Bishop of Jaffna*

Bishop's House,
Jaffna.
23-12-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

January 13, 1987

**Rev. G. D. Anandarajan**
Jaffna College
Vaddukoddai

I am glad that a Christian Student Centre has been established in the University Campus and that the Centre will be declared open and dedicated on 19th January, 1987.

This Centre is an asset to the University Community and will fulfill a long felt need, particularly of a section of the student Community. It was only last year that I participated in the dedication ceremony of the Catholic Chapel and it is a matter of happiness that another institution in the name of Christ is being blessed for the common good.

I extend my gratitude to the Chaplain of the Jaffna University, Rev. G. D. Anandarajan and others who took pains to establish this centre and I wish that the Centre harmonise with the Campus atmosphere and work for the welfare of the whole community, keeping with the ideals of Lord Christ who worked for the good of humanity as a whole.

**(Prof. S. Vithiananthan)**
Vice – Chancellor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the NCC Peradeniya University Chaplain

I consider it a great honour to be invited to give this message to the Souvenir which marks the opening of the Christian Student Centre at the University of Jaffna on 19th January, 1987.

First of all I would like to send you our very warm greetings in Jesus Christ. and to congratulate you on this very important event in the Christian Ministry in the University of Jaffna. We pray that the Christian Student Centre would render a very effective ministry to not only the Christian community in that University but also to the entire community of the Jaffna University.

Students come to a University from various backgrounds and they enter several disciplines of study and research. Christian University students represent a wide spectrum of Christian traditions and emphases of the Gospel of Jesus Christ. A University Chaplain or Christian Student Centre must therefore, be open and ensure that this widest possible spectrum can be persued and developed. No single group ought to be allowed to dominate and every person must feel free to be himself / herself persuing his / her interests and emphases with dignity. Within such an environment, dialogue can take place resulting in the processes which go to strengthen relationships and community in love. The Body of Christ to which we belong is a creative comunity of love.

A University Chaplain or Christian Student Centre is not meant to only serve a narrow group of persons called Christians, but it is meant to be the symbolic presence ot the Risen Lord Jesus Christ in that larger academic community. In this sense, the role of a University Chaplain and a Christian Students Centre involves participating in the entire life pulse of the University, at every possible level. It means being involved in issues, matters of concern and contributing to enrich the academic community too.

So, we take this opportunity to congratulate the Jaffna Diocese of the Church of South India for taking matters to hand and initiating a University Chaplaincy ministry and now, establishing a Christian Students Centre. We pray that an ecumenical ministry will be carried forward at this student centre which will bring glory and honour to the name of Jesus Christ our Lord. May all Christians be knit together as a powerful community of love and may the Academic community find great enrichment because there is now a Christian Student Centre in the University of Jaffna.

**Revd. Rohan L. Wijesinghe, B. D., M. Th.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOOD SHEPHERD CENTRE

*Thirunelvely,*
*Jaffna, Sri Lanka.*
8th Jan., 1987

Shalom !

It is indeed a great blessing to the Jaffna University to have the services of this new Christian Student Centre and all should be grateful to the Christian Leaders for this prophetic initiative

We are all aware of the Vital role that is being played today by our youth in our society. May this Centre help our youngsters to face the great challenges with courage to be the heralds of justice, peace, fellowship, unity and joy in our University, Society and Country.

*Fr. Anton Matthias*
Chaplain

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் பல்கலைக்கழக

## கிறிஸ்தவ மாணவர் நிலையம்,

திருநெல்வேலி — யாழ்ப்பாணம்.

# தூய தோமா ஆலயம்

## *பிரதிஷ்டை ஆராதனை*

## 19—1—1987

திங்கட்கிழமை மாலை 4 மணி

*பங்குபற்றும் தலைவர்கள் :*

அதி. வண. D. J. அம்பலவாணர்.

வண. S. D. ஹோசிங்ரன்.

வண. P. கோவிந்தராஜா.

வண. G, D. ஆனந்தராஜன்-

C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயத்தப் பகுதி

*( அத்தியட்சர் அவர்களோடும், குருமாரோடும் சபையார் வெளியே நிற்கப் பின்வரும் செபம் ஏறெடுக்கப்படும் ),*

குரு : ஆண்டவரே, நாங்கள் என்னென்ன கிரியைகளைச் செய்தாலும் உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், ஈற்றிலே உமது இரக்கத்தினால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும், நாங்கள் செய்வது எல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் அளவிறந்த உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முன்பாகச் சென்று இடைவிடாத உமது சகாயத்தினால் எங்களை நடத்தியருளும் கர்த்தாவே, ஆமென்.

பாட்டு : அல்லேலூயா கர்த்தரையே........

*( ஆலய ஊழியராக நியமிக்கப்பட்டவர் பின்வருமாறு வாசிப்பார் )*

கடவுளுக்குள் சங்கை பொருந்திய தந்தையே, கடவுளுக்கு மகிமையாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தின் வழிபாட்டு முறைகளுக்காகவும் இந்த ஆலயக் கட்டிடம் நிறுவப்பட்டதென்பதற்கு அச்சாரமாகவும், யாழ் கிறிஸ்தவ சமுதாயத்தின் சார்பில் சர்வ வல்லமையுள்ள கடவுளின் வணக்கத்திற்காக இக்கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பிரதிஷ்டை செய்வீர்களென வேண்டி நிற்கிறோம்.

அத் : கர்த்தருக்குள் அன்பானவர்களே, தம்முடைய நாமத்தின் மகிமைக்காக இவ்வாலயத்தைக் கட்டும்படி தமது ஜனத்தின் உள்ளங்களைக் கடவுள் ஏவிவிட்டதற்காய்க் களிகூருகிறோம். யாழ்ப்பாண கிறிஸ்தவ சமுதாயத்தின் சார்பாக இப்பொழுது இந்த ஆலயத்தை அதற்கான பரிசுத்த உபயோகத்துககென பிரதிஷ்டை செய்வோமாக

அத் : யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

சபை : தன் கைகளிற் சுத்தமுள்ளவனும் தன் இதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

அத் : வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே உயருங்கள். மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார்.

சபை : யார் இந்த மகிமையின் இராஜா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத் : அவர் சேனைகளின் கர்த்தரானவர். அவரே மகிமையின் இராஜா.

அத் : ( நாடாவை வெட்டி, கதவைத்திறந்துகொண்டு ) கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திரும்பி வருமளவும் திருச்சபையானது அவருடைய அன்பிற்கு இந்த ஸ்தலத்திலே சாட்சியாயிருக்கும்படி இந்த ஆலயத்தை திறந்து வைக்கிறேன்.

( 'கர்த்தர் பெரியவர்' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு சபையார் யாவரும் உட்பிரவேசிப்பார்கள். யாவரும் உட்சென்றபின் சங்கீதம் சொல்லப்படும் ).

## சங்கீதம்

தலை : கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

சபை : எருசலேமே உன்வாசலில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று.

தலை : எருசலேம் இசைவிணைப்பான நகரமாய் கட்டப்பட்டிருக்கிறது.

சபை : அங்கே இஸ்ரவேலருக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்.

தலை : அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

சபை : எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள். உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.

தலை : உன் அங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைக்குள்ளே சுகமும் இருப்பதாக.

சபை : என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும் உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன்.

தலை : எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தின் நிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்.

தலை : பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

சபை : ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் அப்படியே உண்டாவதாக, ஆமென்.

## பிரதிஷ்டை

குரு : செபம் செய்வோமாக.

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாகிய கடவுளே, மகிமை நிறைந்த கர்த்தாவே, உலகுக்கு நீர் உம்மைக்குறித்து அருளிய வெளிப்படுத்தலுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவும் உமது ஆலயமாகிய திருச்சபைக்காகவும், சகல ஜனங்களுக்காக வும் பிரசங்கிக்கப்பட்டுவரும் உமது சுவிசேஷத்திற்காகவும்

சபை : உமக்கு நன்றி கூறுகிறோம், கர்த்தாவே.

குரு : எங்கள் நாட்டிற்கும் எங்கள் மக்கள் மத்தியிலும், உமது சுவிசேஷத்தைக் கூறியறிவித்து உமக்குச் சுதந்திரமாக ஒரு ஜனத்தை இங்கே கூட்டிச் சேர்த்த மிஷனரிமார், சுவிசேஷகர், குருமார் அனைவருக்காகவும்,

சபை : உமக்கு நன்றி செலுத்துகிறோம், கர்த்தாவே.

குரு: தமது சாதுரியம் பிரயாசையாலும், தமது நிதியுதவியாலும் உம்மை வழி படத் தகுந்த ஒரு ஸ்தலமாய் இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்பக் கிறிஸ்து இயேசுவின் மூலமாய் முன்வந்த அனைவருக்காகவும்.

சபை : உமக்கு நன்றி கூறுகிறோம், கர்த்தாவே.

குரு : எங்கள் நாட்டிலும், விசேடமாக இவ்விடத்திலும் உமது குடும்பத்தினராய் நீர் கூட்டிச் சேர்த்திருக்கும் உமது ஜனத்தை நீர் ஆசீர்வதிக்க வேண்டு மென

சபை : உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம் பிதாவே.

குரு: உமது நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி இவ்வாலயத்தை நீர் ஆசீர் வதித்து பரிசுத்தப்படுத்தும்படி.

சபை: உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், கர்த்தாவே.

குரு: விசுவாசிகளான உமது ஜனத்தின் செபங்கள் பிரயாசைகளுக்கூடாய் இன் னும் உம்மை அறியாதோர் இங்கேவந்து உம்மை வழிபட்டுக் கொள்ளவும், இங்கேயுள்ள எல்லா ஜனத்திற்கும் இவ்வாலயம் ஒரு செபவீடாய் விளங் கவும் நீர் அருள்புரிய வேண்டுமென

சபை : உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், பிதாவே

குரு : இவ் ஆலயம் கிறிஸ்த சமுதாயத்தினதும், மாணவர், விரிவுரையாளர் சமுதாயத்தினதும் ஒருமைப்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும் எப்பொழுதும் ஏதுவாக விளங்க நீர் அருள்புரிய வேண்டுமென்று

சபை : உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், கர்த்தாவே.

*(இப்போது அத்தியட்சகர் கர்த்தரின் மேசையண்டையில் நின்று பின்வரும் செபங்களை ஏறெடுப்பார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத் : கர்த்தர் உங்களோடிருப்பாராக

சபை : அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

அத் : செபம் செய்யக்கடவோம்.

நித்திய கடவுளே, வானுதி வானங்களும் உம்மைக் கொள்ளாதிருக்கும் போது, மனிதராற் கட்டப்பட்ட இவ்வாலயம் எம்மாத்திரம்? ஆயினும் உமது நாமத்திலே இரண்டுபேராவது மூன்று பேராவது கூடிவரும்போது நீர் அவர்கள் மத்தியில் இருப்பீரென வாக்கருளியிருக்கிறீர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய கடவுளே, உமக்கென நாங்கள் பக்தியோடு அர்ப்பணிக்கும் இவ்வாலயத்தை நீர் பரிசுத்தப்படுத்த வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். உமது ஜனம் வந்து கூடி ஆவியோடும் உண்மையோடும் உம்மை ஆராதிக்கத் தகுந்த உமது ஸ்தலமாக இவ்விடத்தை நாங்கள் பிரத்தியேகப்படுத்தி அளிக்கிறோம். உமது மகிமை தங்கும் வீடாயும் உமது ஆலயமும் வாசஸ்தலமாயும் இதில் பிரவேசிப்பவர்கள் இதைக் காணும்படி அருளும். நீர் தாமே மூன்றுமொன்றான திரியேகக் கடவுளாய் என்றென்றைக்கும் ஜீவித்தரசாளுகிறீர். ஆமென்.

## சுருக்க ஜெபங்கள்

எல்லாம் வல்ல கடவுளே, உமது அப்போஸ்தலனாகிய புனித தோமாவுக்கு, மனித அவதாரமான உமது திருமைந்தனை அவருடைய உயிர்தெழுந்த மாட்சியின் மூலம் வெளிப்படுத்தினீர். அவரைத் தங்கள் ஆண்டவராகவும் கடவுளாகவும் அறிந்து ஏற்றுக்கொள்ள எங்கள் நாட்டவர்களை உம்மண்டை இழுத்தருளும். அவர்கள் உம்மை அடைந்து உம்மீது நம்பிக்கைவைத்து, உம்மில் உயிர்பெற அருள்புரியும், எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் மூலம் மன்றாடி வேண்டுகிறோம். ஆமென்.

கர்த்தராகிய கடவுளே, மனித குமாரர் மத்தியிலே உமது வாசஸ்தலத்தை உண்டுபண்ணி, உமது ஜனத்தின் சபையிலே வாசம்பண்ணச் சித்தம் கொண்டீரே, ஆதலால் உமது நாமத்திற்கு மகிமையுண்டாவதாக. உமது நாமத்திற்குப் புகழ்ச்சியாகப் பிரத்தியேகப்படுத்தப்பட்ட இந்த ஸ்தலத்திலே தலைமுறைக் கூடாய் உமது பரிசுத்த நாமம் உண்மையோடும் சிந்த சுத்தியோடும் தொழப்பட அருள்புரியும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாய்ச் சதா காலமும் ஜீவித்தரசாட்சி செய்யும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் நிமித்தம் வேண்டிநிற்கிறோம் பிதாவே. ஆமென்.

## வேதப் பாடங்கள்

| | | |
|---|---|---|
| I இராஜாக்கள் | 8: | 22—30 |
| எபேசியர் | 2: | 13—22 |
| லூக்கா | 2: | 40—49 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுரை : வண. P. கோவிந்தராஜா

## விசுவாசப் பிரமாணம்

வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும், காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே கடவுளை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய், கடவுளுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே, தமது பிதாவினாலே செனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வம்; சோதியிற் சோதி; மெய்த் தெய்வத்தில் மெய்த்தெய்வம்; உண்டாக்கப்படாமல் செனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர்: சகலத்தையும் உண்டாக்கினவர். மனிதராகிய நமக்காகவும், நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கிப் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டு அடக்கம் பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய இராச்சியம் முடிவற்றது.

கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத்தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய் தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிபரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன் பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகுமென்று காத்திருக்கிறேன். ஆமென்.

(இப்போது சபையார் யாவரும் எழுந்துநிற்க அத்தியட்சகர் அவர்கள் பின்வரும் பிரசித்தத்தை அறிவிப்பார்கள்).

கடவுளின் வீடாயும் அவர் சனத்தின் வழிபாட்டு ஸ்தலமாயும் இருக்கும் ப இவ்வாலயம் இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்டதென அறிவிக்கிறோம். இங்கே கூடுபவர்கள் அனைவரும் கடவுளுடைய பரிசுத்த வசனத்தை மாறுபாடின்றிக் கேட்பார்களாக, அவருக்குகந்த ஆத்மீக பலிகளைச் செலுத்துவார்களாக. குருசேறிய கிறிஸ்துவவைக் குறித்த விசுவாசத்தை அறிக்கைசெய்வதில் வெட்கமடையாது இருப்பார்களாக. கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தாற் பெலன் கொண்டவர்களாய்த் தம் வாழ்நாளெல்லாம் அவருக்கு உண்மையுள்ள ஊழியக்காரராய் இருப்பார்களாக.

சபை : ஆமென், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோத்திரப் பாட்டு

'துதித்துப் பாடிட பாத்திரனே.........'

அத்: செபம் செய்யக் கடவோம்.

சர்வ வல்லமையுள்ளவரும், நித்தியருமாகிய கடவுளே, திருச்சபையாகிய சரீரம் முழுவதையும் உம்முடைய ஆவியினாலே ஆண்டு பரிசுத்தமாக்கிக் கொண்டு வருகிறீர். அதன் அவயவங்களாகிய ஒவ்வொருவரும் தான் அழைக்கப்பட்டிருக் கிற நிலைமையிலும் பணிவிடையிலும் உண்மையாயும் பக்தியாயும் உம்மைச் சேவிக்கும்படி, உம்முடைய பரிசுத்த சபையிலுள்ள எல்லா வகையினோர்க்காகவும் நாங்கள் உமது சந்நிதியில் ஏறெடுக்கும் விண்ணப்பங்களையும் செபங்களையும் எங் கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நிமித்தம் ஏற்றுக்கொண் டருளும் சுவாமி. ஆமென்.

## திருவிருந்து ஆராதனை

அப்பம் பிட்குதல்

எல்லாரும் எழுந்து நிற்க குரு சொல்வது:

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எவ்வளவு நன்மையும் எவ்வளவு இன்பமுமானது.

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம், ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

சபை: நான் அவருடைய கூடாரத்திலே, ஆனந்த பலிகளையிட்டுக் கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்,

பாட்டு: அருமை இரட்சகா.........

(இந்நேரம் காணிக்கை சேகரிக்கப்படும்)

குரு: செபம் பண்ணக்கடவோம்

(குருவும் சபையாரும் முழங்காற்படியிட்டுச் சேர்ந்து சொல்வது).

சபை: இயேசுவே, உத்தம பிரதான ஆசாரியாரே, பிரசன்னமாகும். நீர் உமது சீஷர்கள் மத்தியில் பிரசன்னமாயிருந்தது போலவே, எங்கள் மத்தியிலும் பிரசன்னமாகி, அப்பத்தை பிட்கையில், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தி யருளும், நீரே பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும், சதாகாலமும் ஒரே தேவனாக ஜீவித்து அரசாளுகிறீர், ஆமென்.

குரு: கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

சபை: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

சபை : எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு : நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சபை : அப்படி செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

குரு : கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது தகுதியும், நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது. எல்லா மனிதரையும் இருளினின்று தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவர, உம்முடைய மகிமையை எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மனிதசாயலில் வெளிப்படுத்தினீர்,

சபை : ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும், பரம சபையனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி சேனைகளின் கர்த்தராகிய கடவுளே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதமானவராகிய தேவரீருக்கே, மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமென்,
கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும் வருகிறவருமானவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா.

குரு: ஆம் பிதாவே! நீர் பரிசுத்தர், நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். தேவரீர் மனிதரில் உருக்கமாய் அன்புகூர்ந்து, உமது ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸது எங்கள் தன்மையைத் தரித்துக்கொள்ளவும், சிலுவையில் மரித்து எங்களை மீட்டுக்கொள்ளவும், அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையில் ஒரேதரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்துச் சர்வ உலகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமும், போந்ததுமான பலியையும், காணிக்கையையும், பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல், தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும், நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே. அவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே, போஜனம் பண்ணினபின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்கு கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற, புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம். இதைப் பானம் பண்ணும் பொழுதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினர்,

சபை: ஆமென். கர்த்தாவே; உமது மரணத்தை நினைவுகூருகிறோம். உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம். நீர் திரும்பிவரக் காத்திருக்கிறோம். கிறிஸ்துவே உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

குரு: இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிட்கிற அப்பம், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயும், நாங்கள் ஆசீர்வதிக்கிற பாத்திரம், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயுமிருக்கும்படி எங்களையும், நீரே தந்த இந்த அப்பத்தையும், திராட்சரசத்தையும் உமது பரிசுத்த ஆவியினால் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடு பிரார்த்திக்கிறோம். நாங்களெல்லாரும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவில் கூட்டி, இணைக்கப்பட்டவர்களாகி, விசுவாசத்தில் ஒருமைப்படவும், தலையாகிய அவருக்குள் எல்லாவற்றிலேயும் வளரவும் கிருபை செய்யும், அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய உமக்கு, அவர்மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக, ஆமென்.

சபை: பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராட்சியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்ப கிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும் எங்கள் கடனாளிகக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்; தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

(சற்றுநேர அமைதியின்பின்)

சபை: இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல் தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கம செய்கிற இலட்சணமுடைய, மாறாத ஆண்டவராயிருக்கிறீர், ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத சரீரத்தாலும் இரத்தத்தினாலும், எங்கள் பாவமுள்ள சரீரமும் ஆத்துமாவும் சுத்தமாகி, எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கு ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

குரு: (எழுந்துநின்று அப்பத்தைப் பிட்டுச் சொல்லுவது).
'நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை: உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங் களுக்கு இரங்கும்

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே எங் களுக்கு இரங்கும்

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே உமது சமாதானத்தைத் தாரும்.

( இந்நேரம் சபையார் நற்கருணையில் பங்குபற்றுவர் (

குரு: கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை விசுவாசத்தினுல் பெற்றுக்கொண்டவர்களாகிய நாம் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்து வோமாக.

சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரம பிதாவே, உமது நேச குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, அவருடைய விலைமதியாத திருச் சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைப் போஷித்திருக்கிறீர்; எங்கள் பாவங்களை மன் னித்து, நித்திய ஜீவனை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறீச். அளவிடப்படாத இந்த நன்மைகளுக்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறோம் சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை, பரிசுத்தமும் ஜீவனும் உள்ள பலியாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம்: இதுவே நாங்கள் செய்யத்தக்க ஆத்மீக ஆராதனை. நாங்கள் இந்தம் பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷந் தரியாமல், தேவரீருடைய நன்மையும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்கதாக, எங்கள் மனம் புதிதாகிறதினுலே மறுரூபமாகும்படி எங்களுக்கு அருள்புரியும். கடைசியில் நாங்கள் உமது பரிசுத் தவான்கள் அனைவரோடும் கூட உமது நித்திய இராச்சியத்தின் ஆனந்தத்தை அடையத்தக்கதாக, இவ்வுலகத்தில் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்குக் கிருபை செய்யும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாய் சதாகால மும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இவைகளை வேண்டிக்கொள்ளுகிறோம்.

சபை: ஆமென். எங்க்ள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும் ஸ்தோத் திரமும், கனமும், வல்லமையும், பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவ தாக. ஆமென்.

(அத்தியட்சர் ஆசீர்வாதம் கூறுவார்)

எல்லாப் புந்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் கடவுளையும், அவருடைய குமாரனுகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை யும் பற்றிய அறிவிலும். அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தை யும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா. குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய கடவுளுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து. எப்பெழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

பாட்டு : சீர் இயேசு நாதனுக்கு........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்.

பல்லவி

இராஜாதி இராஜனும் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்;
அல்லேலூயா, அல்லேலூயா,
தேவனைத் துதியுங்கள்.

2. தம்புரோடும், வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினோர் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்,

3. சூரியனே, சந்திரனே, தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே, கல்மழையே, படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய்* கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்.

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே, தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய்ச் செலுத்தியே துதியுங்கள்.

5. ஆழ்கடலே, சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினோர் துதியுங்கள்
தூதர்களே, முன்னோடிகளே, தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

### பல்லவி

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலும்
தமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகத் துதிக்கப்படத் தக்கவர்.

### சரணங்கள்

1. வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும்
சர்வ பூமியின் மகிழ்ச்சியாயிருக்கிறது
அது மகாராசாவின் நகரம்.

2. அதின் அரண்மனைகளில் தேவன் உயர்ந்த
அடைக்கலமா யறியப்பட்டுள்ளார்
இதோ இராஜாக்கள் கூடிக்கொண்டு ஏகமாய்க்
கடந்துகொண்டு வந்தார்கள்.

3. தேவனே உமது ஆலயத்தின் நடுவில்
உம்முடைய கிருபையை
நாங்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம்
உம் நாமம் விளங்குகிறது.

4. பின்வரும் சந்ததிக்கு விபரமாய்க் கூறவே
அதின் அலங்கத்தைக் கவனியுங்கள்
அலங்காரத் துடனுள்ள அரண்மனையை
நீங்களுற்றுப் பார்த்திடுங்கள்.

5. என்றென்றைக்குமுள்ள சதாகாலமுமே
எங்கள் தேவன் அவரே
மரணபரியந்தம் நம்மை நடத்தும்
மாறாக் கர்த்தரும் அவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

துதித்துப் பாடிட பாத்திரனே
துங்கவன் யேசுவின் நாமமதே,
துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தூயனை நேயமாய் தோத்தரிப்போமே.

பல்லவி

ஆ! அற்புதமே
அவர் நடத்துதலே — ஆனந்தமே
பரமானந்தமே — நன்றியால்
உள்ளமே மிகப் பொங்கிடுதே நாம்
அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே,
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் தோத்தரிப்போமே — ஆ! அற்

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கானதால் தோத்தரிப்போமே — ஆ! அற்

4, இந்த வனாந்தர யாத்திரையால்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடமானதால் தோத்தரிப்போமே — ஆ! அற்

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாருமென்றே நாம் அழைத்திடுவோம்,
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிட தோத்தரிப்பேமே — ஆ! அற்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

### பல்லவி

அருமை இரட்சகா கூடிவந்தோம் — உம
தன்பின் விருந்து அருந்த வந்தோம்

### அனுபல்லவி

அறிவுக் கெட்டாத ஆச்சரியமான
அன்பை நினைந்து அடி பணிந்தோம் — அரு

### சரணங்கள்

1, ஆராயும் எமது உள்ளங்களை — பல
வாமுன நோக்கம் எண்ணங்களை,
சீராய் சுத்தமானதா யுட்கொள்ள நீர்
திருவருள் கூரும்! தினமெமைப்பாரும் — அரு

2. சீவ அப்பமும் பானமும் நீர் — எங்கள்
தேவை யாவையையும் திருப்தி செய்வீர்,
கோவே மா பயபக்தியாய் விருந்து
கொண்டாட இப்போ கூடிவந்தோம் — அரு

3. உமதன்பின் பிரசன்னம் பெற்றேம் — உமது
ஒளி முக தரிசன முற்றேம்,
சமாதானம் அன்பு சந்தோஷமும் எம்மில்
தங்கச் செய்திடும் தருண மீதே — அரு

4. கிருபை விருந்தின் இந்த ஐக்கியம் — பூவில்
கிடைத் தற்கரிய பெரும் பாக்கியம்,
அரும் பிரியத்தோ டெங்களை நேசிக்கும்
குருவே வந்தனம் கூறினேம் பணிந்தே — அரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

### பல்லவி

சீர் இயேசு நாதனுக்கு ஜெய மங்களம்; ஆதி
திரியேக நாதனுக்கு சுப மங்களம்

### அனுபல்லவி

பாரேறு நீதனுக்கு, பரமபொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு — சீர்

### சரணங்கள்

1. ஆதி சருவேசனுக்கு ஈசனுக்கு மங்களம்;
அகிலப் பிரகாசனுக்கு நேசனுக்கு மங்களம்;
நீதி பரன் பாலனுக்கு; நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு — சீர்

2. மானுபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர்கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்
கானுன் நல்தேயனுக்கு கன்னிமரி சேயனுக்கு
கோனுர் சகாயனுக்கு கூறு பெத்தலேயனுக்கு — சீர்

3. பத்து இலட்சணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்கு, சருவாதி காரனுக்கு
பக்தர் உபகாரனுக்கு, பரம குமாரனுக்கு — சீர்

★

புனித வளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம் 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org